**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.68/2018**
**Prosecution Witnesses: 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : காமராஜ் | Caste | : |
| Father Name/ Husband Name | : மாயாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(30.09.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் பாலூத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1,2 ஆகியோர்களை எனக்குதெரியாது. எதிரி கர்ணன் என்பவரை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது அ.சா.1, 2 அவர்களது தோட்டமும், எதிரி கர்ணன் என்பவரது மாமனார் தோட்டமும் அருகருகே இருந்தது என்றும் இந்நிலையில் 15.01.2017 அன்று காலை அ.சா.1 , 2 ன் தோட்டத்தை எதிரியின் மாடுகள் மேய்ந்ததை பார்த்து அ.சா.2 தனிக்கொடியம்மாள் எதிரியின் மாமியாரிடம் இப்படி மாடுகளை மேயவிடலாமா என்று கேட்டதற்கு இருவருக்கும் வாக்கு வாதம் நடந்தது என்றும் அதே நாள் மாலை 16.30 மணியளவில் அ.சா.1, 2 அவர்களது தோட்டத்தில் இருந்த போது எதிரி கர்ணன் என்பவர் அ.சா.2 ஐ பெண் என்றும் பாராமல் அசிங்கமாக பேசி

அதை தட்டிக்கேட்ட அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி அ.சா.2 யும் கீழே தள்ளிவிட்டு தென்னமட்டையால் அவரை உடம்பில் அடித்து அ.சா.1, 2 ஆகியோர்களை கொலைமிரட்டல் விடுத்தார் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**